ஆண்டு பட்டிகை வழக்கு எண்.25/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 25/2024 LW- 1 PW- 3

Name : பண்டரிநாதன் ( புகார்தாரர்)

Father's/Husband's Name : நாராயணன்

Village : செந்தமிழ் நகர்,

Taluk : சிவகங்கை

District : சிவகங்கை

Age : 76/2024

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of October 2024

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11:55 A.M. - 12:16 P.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை பார்த்ததாக ஞாபகமில்லை. காவல் நிலையத்தில் நான் பார்த்திருக்கலாம். கடந்த 2000 ம் ஆண்டு நத்தம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நான் பணியில் இருந்தபோது 09.07.2000 ம் தேதி சிறுகுடியில் போலி மதுபானம் விற்பனை செய்வதாக கிடைத்த தகவலின் பேரில் மேல் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் அன்றைய தினம் மதியம் 12.30 மணிக்கு நானும், என்னுடன் தலைமைக் காவலர்களான 462, 500, 640, 872, மற்றும் முதல் நிலைக்

காவலர் 124 ஆகியோருடன் சிறுகுடியில் உள்ள ஹரிஜனக் காவலனியில் மதுவிலக்கு சம்பந்தமாக முற்றுகை செய்தபோது, விசாரணையின் பேரில் பெயர் விலாசம் தெரிந்து கொண்ட தங்கராஜ், த/பெ.அய்யனுர், வயது 45 என்பவர் சிறுகுடியில் உள்ள அவரது பெட்டிக்கடைக்கு எதிர்புறம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த நபர் யூனிபார்ம் அணிந்திருந்த எங்களைக் கண்டவுடன் தெற்கு பக்கமாக செல்ல முயற்சி செய்தவரை சந்தேகத்தின் பேரில் பிடித்துவிசாரணை செய்தோம்.

2. அவர் கையில் வைத்திருந்த பச்சை நிறக் கூடையில் சோதனை செய்தபோது, அதில் 180 ML அளவுள்ள மொத்தம் 5 மது பாட்டில்கள் இருந்தது. அதில் 3 பாட்டில்கள் மானிட்டர் விஸ்கி ஆகும். 2 பாட்டில்கள் XXX ரம் இருந்தது. அவரை விசாரித்தபோது, மேற்படி பாட்டில்களை எந்தவித அரசு அனுமதியும் இல்லாமல் போலி லேபிள்கள்ஒட்டியிருந்தது. அன்றைய தினம் பகல் 12.45 மணிக்கு எதிரி தங்கராஜை காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் வெற்றிவேல் மற்றும் குணு ஆகியோர் முன்னிலையில் எதிரியை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தான் மதுரையில் உள்ள மேலப்பெருமாள் மேஸ்திரி வீதியில் உள்ள அருப்புக்கோட்டை ஒயின்ஸ் என்ற சொசைட்டி கடையில் கடந்த வெள்ளிக்கிழமை 30 பாட்டில்கள் ரூ.43 வீதம் வாங்கியும், அதை ஒரு பெட்டியில் அடைத்து கொண்டு வந்து அதில் 25 பாட்டில்களை விற்பனை செய்து விட்டதாகவும், மீதம் உள்ள 5 பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்தபோது நாங்கள் பிடித்துவிட்டதாகவும் அதன்பேரில் அவர் எங்களிடம் ஒப்படைத்த போலி மதுபாட்டில்கள் 5 ஐ அன்றைய தினம் 13.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **(தங்கராஜ் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்திற்கான அத்தாட்சி நகல் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (தங்கராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் நகலின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. அன்றைய தினம் 14.00 மணிக்கு நத்தம் காவல் நிலையம் வந்து எதிரி தங்கராஜ் மற்றும் வழக்குச் சொத்துக்களை ஆவணங்களுடன் தனி அறிக்கை தாக்கல் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் தனி அறிக்கை நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பமும் என்னுடையதுதான். **(தனி அறிக்கை நகல் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(படிவம் 91 நகல் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

4. பகுப்பாய்விற்கு அனுப்பிய அறிக்கையில் என்ன முடிவு வந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் வழக்கை நேரடியாக விசாரிக்கவில்லை என்றும், ஆய்வாளரின் தூண்டுதலின் பேரில் காவல் நிலையத்தில் வைத்து வழக்கை உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு குறித்த தகவல் தெரியாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல-சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்